105. கேளப்பா பாண்டத்தில் எளித் தயிலம் வாங்கி கெடியான தயிலமடா ஐந்துரு வயண்டம்
வாளப்பா தயிலத்தை சித்துக் கெல்லாம் வளமான தயிலத்தைக் குருச் சேர்த்தாட்டு
நாளப்பா வைங் காந்தச் செந்தூரங் கேள் நலமான பலமைந்து அயந் தானப்ப
ஆளப்பா காந்தமது பலந்தானைந்து அப்பனே அயந் தன்னைக் கிண்ணிச் செய்யே.

106. செய்யப்பா கிண்ணி தன்னிற் காந்தம் போடு செயமான விடிச் சுண்ணம் பலந்தான் போடு
நெய்யப்பா மூப்புச் சுண்ணம் வெடியுப்புச் சுண்ணம் நலமான வருக பலந்தானதிலே போடு
கையப்பா ஐந்தாண்டத் தயிலம் வார்த்து கனிவாகத் கெந்தமதை யெரித்திடாய் நீ
ஐயப்பா கிண்டி வரக் காந்த முருகும் பாரு அப்பனே கிண்ணி போல் மெழுகைக் கூட்டே.

107. கூட்டப்பா கரந்த மதை யதனுடன் சேர்க்க குணமான காந்தக் கிண்ணி யாகும் பாரு
வாட்டப்பா காந்தக் கிண்ணியாகும் பாரு வாட்டப்பா காந்த சத்துவைத் திற் சேரு
நாட்டப்பா குளவியா டைத்திட்டாக் கால் நலமாகப் பொடிப் பொடியாய்த் தானாய்ப் போகும்

ஆட்டப்பா ஐங்கோல தயிலத்தாலே அப்பனே யாட்டி வர மெழுகாய்ப் போமே.

108. போமப்பா வில்லை செய்து ரவி யுலர்த்திப் புடம் போடச் செந்தூரமாகுமென் போலாம்
ஆமப்பா அயச் செந்தூர வேதை தாரம் அப்பனே சொல்லுகிறேனென்பாய்க் கேளும்
வாமப்பா ஒரு சேர செம்புருக்கி வளமான செந்தூரம் விருகன் போடு
நாமப்பா சட சடென்று சத்தம் போடும் நலமாகப் பழுத்ததுவும் பதிருமே.

109. ஆமப்பா செந்தூரம் நாற்பது நாள்க் கொள்ளும் அப்பனே திரேகமது பொன்னுமாகும்
நாமப்பா காயத்துக் காதி கற்பம் நலமான கற்பத்தைக் கொள்ளு கொள்ளு
வாமப்பா அயக் காந்த கிண்ணஞ் சொன்னேன் வளமாகக் கிண்ணத்திற் கற்பங் கொள்ளும்
கதமப்பா அமுர்த மது கொள்ளு கொள்ளு கனமான கிண்ணத்தெயறிந்து செய்யே.

109. ரசக் கிண்ணம்.

செய்யப்பா ரசக் கிண்ணம் சொல்லக் கேளும் செயலான பத்து பலம் ரசந் தான் வாங்கி
அய்யப்பா செம்புக் கிண்ணமொன்று வாங்கி அப்பனே கிண்ணத்தில் ரசத்தை அத்து
கைய்யப்பா வைந்தாண்டத் தயிலம் வாரு கனமான ஜெங்காய முப்பூவு போடு
வைய்யப்பா யிலை மூன்று யேகித்தக் கொண்டு வளமான ரசந் தனிலே கலக்கிக் கேளே.

110. கேளடா கிண்ணத்தை யடுப்பில் எத்தி கெடியாகச் சிறு தீயை யெரித்திட்டாக்கால்
வாளப்பா வட்டது போல்க் கூட்டிக் கொள்ளும் வளமான கட்டதனை மறுபடியுருக்க
நாளப்பா வெள்ளியது யுருகும் போலே நலமாக யுருகுமடா பாரு பாரு
ஆளப்பா கிண்ணியது போல் மண் மெழுகு கட்டி அப்பனே யூதிடவே கிண்ணியாமே.

111. ஆமப்பா ரசக் கிண்ணி மருத்துவங் கேளும் அப்பனே அமுர்தமுடன் காரம் விட்டால்
காமப்பா பொங்கிய வளிந்து போகும் கனமான ரசக் கிண்ணி மருத்துவந் தன்னை
வாறப்பா கற்பத்தை யிதனிற் கொள்ளு வளமான சகல சித்துச் சிரசத்தில் தோன்றும்
நாமப்பா ரசக் கிண்ணி மருந்து வந்தனை நலமாக வறிந்தோர்கள் சித்தராமே.

112. சித்தருச் சடமெடுத்தா லெல்லா மாளும் சீர் கெட்ட மடையருக்கோ சித்தியாது
பத்தரைப் பிறந்தோர்க்குந் தோன்றுமப்பா பண்பான சிவயோகி பத்தருக்கு
அத்தரைப் பிறந்தவர்க்கு அமுர்த மூழம் அப்பனே அன்புள்ள யசுவனியைக் கேளு
வித்தருப் நெறி நவருதிருந் தோருக்கு வளமாகச் சகலமுந் தான் தோன்றும் பாரே.

113. பாரப்பா அயச் செம்பு சொல்லக் கேளும் பண்பான அயத் தகடு பலந்தானஞ்
ஆரப்பா சுத்த சலம் படிதான் இரண்டு அப்பனே விஷச் சுண்ணம் பலந்தான் போட்டு
நேரப்பா அயத் தகட்டைக் காச்சித் தோய்க்க நேராக வைந்தூரங் காச்சித் தோய் நீ
வாரப்பா அயச் செம்பாம் பாரு பாரு வளமான அயச் செம்பு செந்தூரங் கேளே.

114. கேளப்பா அயச் செம்பு யுருக்கிக் கொண்டு கெடியான பாஷாணச் சுண்ணம் மீய
ஆளப்பா யரை நொடியில் வெட்டையாகும் அப்பனே வெட்டை தனை கல்வத்திட்டு
நாளப்பா பிண்ட செய நீராலாட்டு நலமாக வாட்டியதை வில்லை செய் நீ
வாளப்பா ரவி யுலத்திப் புடத்தைப் போடு வளமாக வருண நிறம் செந்தூரமாகுமே.

15. ஆமப்பா செந்தூரம் வேதை கோடி அன்பான அறிவுள்ளோன் அறிந்து கொள்ளு
வாமப்பா காயத்துக் காதி கற்பம் வளமான கற்பமடா பதனம் பண்ணும்
நாமப்பா நாகத்தின் கட்டுச் சொல்வேன் நலமான கட்டதனை யார் தான் காண்பார்
காமப்பா நாகமது பலந்தான் இரண்டு கனமான யயக் கரண்டி தன்னிற் போடே.

நாகக் கட்டு.

116. போடப்பா யடுப்பேத்தி தீயை மூட்டி பெருன சுறுக்கு வகை கட்டுப் போட்டு
நாடப்பா ஈரு கையிலே விஷச் சுண்ணங் கஞ்சி போடு நலமாகக் கட்டியது கன் விட்டாடும்
ஊடப்பா நாகக் கட்டை யின்ன சொல்வேன் வளமாக வெள்வங்கம் யுருக்கிக் கொண்டு

ஆடப்பா யுருகையிலே நாகக் கட்டைக் கொடுத்துப் பாரு அப்பனே வெள்ளியது பதிறு மாத்துத் தானே:

## நாகச் சுன்னம்.

117. காணப்பா நாகத்தின் பெருமையைத் தான் காக் கெள்ளக் கூட்டாது மருந்த மெத்த
ஆணப்பா நாகத்தின் சுன்னங் கேளு அப்பனே நாகத்தைக் கல்வத்திட்டு
வாணப்பா சுண்ணமது களஞ்சி போடு வளமான செய்நீரால் சாம மாட்டு
மாணப்பா யாட்டியதை வில்லை செய்து மதி தனிலே ரவியலர்த்திப் புடத்தைப் போடே.

118. போடயிலே சுண்ணம்பு கொடிய காரம் பொருமி வெகு நீருமடா புசிய யட்டமாகும்
வாடையிலே சுண்ணம்பை யென்ன சொல்வேன் வளமான நாகத்தின் செந்தூரஞ் சொல்வேன்
நாடயிலே நாகத்தைக்கல்வத்திட்டு நலமான முப்புச் செய்நீராலாட்டு
ஆடையிலே வில்லை செய்து ரவி யுலர்த்தி அப்பனே கெசபுடத்தில் போட்டுக் கொண்டு

119. கேளப்பா செந்தூரம் யெடுத்துப் பாரு செடியான முருக்கம் பூப் போலாமே மைந்தா
வாளப்பா வேதை கட்டு மாகு மைந்தா வளமான செந்தூர மருத்துவத்தை
நாளப்பா நந்தீசர் வாக்கமிர்தத் தாலே வளமாக யான் கண்டு சொன்னேனய்யா
ஆளப்பா நாகச் செந்தூரங் கொண்டு அப்பனே சட்டை தள்ளித் திரேகம் பொன்னாம்

120. ஆமப்பா தத்துவத்தை அறிந்து பாரு ஆனதொரு சராசரங்கள் முற்றும் தோன்றும்
நாமப்பா வெளி திறந்து சொல்லிப் போட்டேன் நலமான நந்தீசரருளாலே
வாறப்பா வழிறையா யறிந்து சொன்னேன் வளமான கலைக்கியான மார் தான் காண்பார்
மாமப்பா மகத்தான பொருள்களுக் கெல்லாம் மாட்டி விட்டேன் கலைக்கியானம் மகிமை பாரே:

121. அரசானுன சருவாங்க நோய்கள் போக தனதானமும் மூர்த்தி மெனுரு மைந்தா
வேனுன மெமுருந்தனைச் சொல்லக் கேளும் வெளியான முன்பின்ட முப்பூவப்பா
ஆனுன கல்வமதில் பல நாளிட்டு ஆனதொரு விஷச் சுன்ன மண்டச் சுன்ன
மானுன வகைப் பலந் தானென்று விட்டு மருந்தான வண்டமெனச் சாருயம் வாரே.

122. வாறென்ற சாற்றுலே சமமாட்டு வளமான ஐந்தண்டத் தயிலம் சாமம்
நேறென்ற மெழுகாகும் பறனி தனில் வைத்து நலமான வாலையைத் தான் பூசை பண்ணு
ஆறென்ற மும்மூர்த்தி மெழுகெடுத்து அப்பனே நெய் தனிலே குழைத்து விட்டால்
மாறென்ற வந்த தொரு மேகரோகம் மருந்தான குஷ்ட மொடு பாண்டு போமே.

123. போமென்ற சயகாச மூளை ரோகம் பொருந்தாத பீனிசங்கள் சூலை பதினெட்டும்
வாமென்ற வந்ததொரு ரோக மெல்லாம் வழிகாணுதோடுமடா வடுத்துப் பாரு
மாமென்ற யுலகத்துக்கு சித்தன் நீதான் மருத்தான தரம் மிகுந்த சஞ்சீசி யாவாய்
ஆமென்று யறிந்து செய்தால் தர்ம மார்க்க வாகாத மடையர்களே மைந்தோரே.

124. ஓனுன சிவயோகி யென்றால் பார்ப்பார் யுலகிலுள்ள மாண்பார்களே பார்க்கப் போருர்
ஊறுன உலகத்தோர் கண்டாருமல் உலகமெல்லாஞ் சித்தாரு முண்மை யுண்மை
பாருன பறமரே தேவிக்குச் சொன்னூர் பண்பான தேவி யவள் நந்திக்குச் சொன்னூர்.
ஆருன நந்தி யவரெனக்குச் சொன்னூர் அப்பனே யானறிந்து சொல்வேன் காணே.

## அண்ட ரசம்.

125. காணப்பா சித்தர்கள் தான் மறைத்ததெல்லாம் கணக்காக ஒவ்வொன்றாய்ப் பிரித்துச் சொல்வேன்
மாணப்பா வண்டரச விழவுச் சொல்வேன் மகத்தான அண்ட விந்தைக் கல்வத்திட்டு

ஆமப்பா அண்டச சுண்ண முப்பூவின் சுண்ணம் அப்பனே விஷச் சுண்ணம் பிண்டச் சுண்ணம்
வாளப்பா யிவை யெல்லாம் போட்டரைக்க வசமான ரசமது தான் கசியலாச்சே.

126. ஆச்சப்பா பீங்கானில் பினிஞ்சாயாகல் அப்பனே ரசமது தான் விழுகும் பாரு
நச்சப்பா வாலை ரசமிது தானய்யா நலமான ரசந் தன்னை பதனம் பண்ணும்
காச்சப்பா கானர்ப் பால் ரசத்தைச் சொன்னேன் கருவான ரசந் தன்னை யார் தான் காண்பார்
மூச்சப்பா மூச்சடங்கு முடத்தைக் கண்டால் முனையான வாயிதிறே தாயி யாமே.

127. ஆமப்பா திரோதயி கூத்தெல்லாந் தான் யப்பனே யாதார மடியின்றுண்டா
காமப்பா சிவயோகம் கூத்தெல்லாந் தான் கனக்காக மேலாதாரத்திலையா
வாமப்பா சிக்கின்ற ஞானயோகம் வளமான கண்ரேட்டம் புன்னிரண்டில்
நாமப்பா வென் சாரை யிதனுண்டு நலமான கரு நெல்லி யிதிலமாச்சே.

128. ஆச்சப்பா தென்மேர்க்குப் பொன் மலை தானுண்டு வம்மலையிலா யிறத் தெட்டெ தமுண்டு
நாச்சப்பா மயேந்திரகிரி வடக்கிலப்பா நலமான சலக் கிறை முழந்தானுண்டு
மர்ச்சப்பா வர்தலத்தில் வெண்ணைமுண்டு மகத்தான சுரேணிதத்தின்குகை மப்பா
காச்சப்பா கனக சபைத் திரு நடனக் கூத்து கணக்கென்ன முடியாது கண்டு பாரே.

129. பாரப்பா யிவையெல்லாங் கட்டிஞேர்க்கு பண்பான சிவயோகம் யவர்க்கு மைந்தா
நாரப்பா யெனைப் போலே மறப்பெல்லாந் தான் நலமாகத் திறந்து நன்றாய் நாட்டினேன் பார்
காரப்பா தங்கத்தின் களங்கு சொல்வேன் கனமான தங்கத்தைக் கரைய வார்த்து
மாரப்பா புளிப்புடனே முப்பூவுங் கூட்டி மகத்தான காரத்தின் மேற் கவசஞ் செய்யே.

<u>தங்கக் கிழங்கு.</u>

130. செய்யப்பா புடந் தனிலே போட்டெடுக்க செயமாக ஆகுகியது களங்கு மாகும்
வையப்பா செந்தூரஞ் செய்யக் கேளு வளமான களங்கதனைக் கல்வத்திட்டு
ஐயப்பா பழச் சாத்தாலரட்டிக் கொண்டு அப்பனே அய்ங் காயங் கவசஞ் செய்து
மெய்யப்பா கோழிப் புடம் போட்டெடுக்க மகத்தான செந்தூர மாகுமே.

131. ஆமப்பா செந்தூர மண்டலந் தான் கொள்ளு அப்பனே வச்சிர மிட்ட தேகமாகும்
நாமப்பா யறிவுள்ளோரறிந்து கொள்ளு நலமான சத்திய வானறிந்து கொள்வான்
காமப்பா வயக் கழங்கு சொல்லக் கேளு கனமான வயப் பொடி தான் கொண்டு வந்து
வாமப்பா தாம்பிரிப் பொடி கூடப் போட்டு வளமான கல்வத்தில் போட்டு வாட்டே.

<u>அயக் கிழங்கு.</u>

132. ஆட்டப்பா புளியுடனே செய்நீர் வார்த்து அப்பனே ஆட்டி விட மெழுகு போலாம்
மாட்டப்பா வுண்டையதாய்ச் செய்து கொண்டு மதி தனிலே யுலர்த்தியதைச் சீலை செய்து
வாட்டப்பா கொல்லன் குகை தன்னில் வைத்து வளமாக மூதையிலே யுருகும் பாரு
காட்டப்பா வதை யெடுத்து வார்த்து வைத்து கனமாக வுடைத்துப் பார் களங்காம் பாரே.

1333. பாரப்பா வயக் கிழங்கு கொடுத்துப் பாரு பரிவான சொர்ண மது பத்தரை தானாகும்
வா ரப்பா வளிதுறையாய் நன்றாய்ச் சொன்னேன் வளமான வென் மொளி தான் தவறேயில்லை
காரப்பா சற் குருவை யறிவைக் காரு கனக மணியின் சாலைப் பணிந்து போற்றே

134. போற்றுவது இந்நூலைப் பூசை பண்ணு புகழான கலைக்கியானப் புகழோ மெத்த
ஆத்துவ மனதடங்கி நிற்க வேணும் அசையாமல் வாசியே சிகட்ட வேணும்
நீத்துவது விஷக் கல்லை நீத்த வேணும் நிலையான முப்பூவை முடிக்க வேணும்
வாத்துவது ஐங்காயம் புளியும் தன்று வளமாக வாழ்த்தியதைப் பூசை பண்ணே.

135. பண்ணுவது நீர்களே தான் பூசை பண்ணு பண்ணுவது காரத்தினமிர்தங் கொள்ளு
நின்னுவது கண்டேட்ட நிலைக்கப் பண்ணு நிலையான யமுர்த மதைக் கொள்ளு கொள்ளு
யென்னுவது நித்தடையிலே மூலாதாரம் யேகாந்தக் கூட்டமது வெளியாய்த் தோன்றும்
வண்ணுவது யிந்த ஓலை குகையில் வைத்து வளமாகப் பூசித்துப் பதனம் பண்ணே.

136. வெடியுப்பு திரவகம்

பண்ணப்பா வெடியுப்பு திரவகந்தான் சொல்வேன் பண்பான வெடியுப்புத் திரவமோ பலமோ பத்து
நண்ணப்பா விஜீச் சுண்ணம் பலந் தானென்று நலமான வாலை தன்னிலிறண்டு விட்டு
அன்னப்பா ஐங்காயச் செய்நீர் விட்டு அப்பனே அதின் மேலே தமரு மூடி
வன்னப்பா தீ மூட்டிக் கண் முகமும் பார்த்து வளமான குழிப் பீங்கான் தன்னை வையே.

கல்லுப்புத் திரவகம்.

137. வையப்பா வைக்கயிலே திரவகந் தான் விழும் வளமான திரவகத்தைப் பதனம் பண்ணு
ஐயப்பா வெடியுப்புத் திரவகந் தான் சொன்னேன் அப்பனே கல்லுப்புத் திரவகந் தான் கேளும்
நையப்பா கல்லுப்புப் பலந்தான் பத்து நலமான விஜீச் சுண்ண வாலை தனிலிட்டு
மையப்பா தீ மூட்டிப் பீங்கான் வைத்து மகத்தான சாமமொன்று யெரித்திடாயே.

கறியுப்புத் திரவகம்.

138. யெரியப்பா திரவகந்தான் பீங்கானில் விழும் யென்மகனே திரவகத்தைப் பதனம் பண்ணும்
வரியப்பா கல்லுப்புத் திரவகந் தான் சொன்னேன் வளமான கறியுப்புத் திரவகந் தான்
அறியப்பா கறிப்பு பலந்தான் பத்து அப்பனே வாலை தன்னிற் போட்டுக் கொண்டு
மறியப்பா விஜீச் சுண்ணம் பலந்தான் போட்டு மகத்தான தீ மூட்டிப் பீங்கான் தான் வையே.

சீன வைப்பு.

139. வைத்திடவே திரவகந் தான் விழும் பாரு வளமான திரவகத்தைப் பதனம் பண்ணும்
நைந்திடவே கறியுப்புத் திரவகந் தான் சொன்னேன் நலமான வித்துப்புத் திரவகந்தான்
மைந்திடவே யித்துப்பு பலந்தானது மகத்தான வாலை தன்னிலிட்டுக் கொண்டு
கைத்திடவே ஐங்காயங் கொஞ்சம் போட்டு களமான தீ மூட்டித் திரவகந் தான் வாங்கே.

140. வாங்கவே திரவகத்தைப் பதனம் பண்ணும் வளமான திரவகத்தை நன்மையச் சொன்னேன்
நாங்கவே சீனியுப் புத்திரவகந் தான் கேளும் நலமான சீனியுப்பு பலந்தான் பத்து
ஆங்கவே பொடி பண்ணி வாலை யிற்றுன் போட்டு அப்பனே சவுக்காரச் சுண்ணம் போட்டு
சாங்கவே தீ மூட்டித் திரவகத்தை வாங்கு சமர்த்தான திரவகத்தைப் பதனம் பண்ணே.

141. பண்ணப்பா வாலையுட பாதத்தைத் தான் பண்பாகப் பூசித்துப் பதனம் பண்ணும்
அண்ணப்பா சரக்குனிடை வைப்புச் சொல்வேன் அப்பனே பூனீரம் வெடியுப்புங் கூட்டி
வண்ணப்பா பாண்டத்திற் போட்டு மூடி வளமான ஐந்தண்டத் தயிலம் வார்த்து
பண்ணப்பா குழி வெட்டிப் பாண்டத்தை வைத்து பதிவாக மேல்மொது சில்லுப் போட்டே.

142. போடப்பா பிண்டத்தின் னெருவைக் கொட்டி பொருளதுவே நாற்பது நாள் வைத்துப் போத்து
நீளப்பா சீனமது விளைந்து போச்சு நீடுலகில் சீன வைப்பு வைப்பு வைத்துக் கொள்ளு
ஆடப்பா கம்பியுப்புப் பனிரங் கூட்டி யப்பனே பாண்டமலிட்டுக் கொண்டு
வாடப்பா முன் தயிலம் வார்த்துக் கொண்டு வளமான குளி வெட்டி யெருவில் வைய்யே.

## வெங்கார வைப்பு.

143. வையப்பா நாற்பது நாள் சென்றெடுத்துப் பாரு வளமான வெங்கார மெழுமே மெத்த
நெய்யப்பா வெங்காரம் வைத்துக் கொள்ளு நலமான பூரத்தின் வைப்புக் கேளும்
மெய்யப்பா சீனமுடன் கெந்தி ந்தம் மகத்தான சரியிடையாய்ச் சேர்த்திடிந்து
ஐயப்பா சுண்ணமுடன் செய்நீர் விட்டு அப்பனே பிசைந்து கிண்டிக் குப்பி தன்னில் வைய்யே.

## துருசு சுண்ணம்.

144. வைக்கவே நெல்ப் பானை தன்னில் வைத்து மூடி வளமாக நவநாள் தான் சென்றெடுத்துப் பாரு
ஐக்கவே பூரமது கொடியப் புறம் அப்பனே யிப்புறம் பதனம் பண்ணும்
நைக்கவே துருசிட்ட வைப்புக் கேளும் நலமான சீனியுப்புக் கல்லுப்பும் கூட்டி
மைக்கவே முலைப் பாலும் யெருமைத் தயிரும் மைந்தனே சுத்த சலம் மூன்றுஞ் சேர்த்தரையே.

145. அரைத்தப்பா செம்புக் கிண்ணி தன்னில் வைத்து அப்பனே வாய் மூடிக்குழிதான் வெட்டி
வரைந்தப்பா பிண்டத்தி லெருவைக் கொட்டி வளமாக கிண்ணி வைத்து யெருவால் மூடி
மறைத்தப்பா மஞ்ச-செசல்லேன்-திரைத்த மண்டலஞ் சென்றெடுத்துப் பாரு மகத்தான துரிசு நீறென்ன சொல்வேன்
நிரைத்தப்பா பூசித்துப் பதனம் பண்ணு நிச்சயமாய்த் துரிசுட மருத்துவங் காணே.

## சார வைப்பு.

146. காணப்பா சாரத்தின் வைப்புக் கேளும் கண்மணியே அமுரியுப்புக் கல்லுப்பு போடு
ஊணப்பா முப்பு சுண்ணம் வெள்ளாட்டு நீரு மப்பனே சுத்த சலம் வார்த்தரைத்து
வாணப்பா பாண்டத்தில் போட்டு மூடி வளமாகப் பசவிருந்த விடத்துக்கேகி
மாணப்பா குழி வெட்டி சமாதி வைத்து மகத்தான நாற்பது நாள் சென்றெடுத்துப் பாரே.

## வெள்ளைப் பாஷாணம்.

147. பாரப்பா காரத்தை யென்ன சொல்வேன் பண்பான சாரத்தைப் பூசை பண்ணு
ஆரப்பா அறிவார்கள் வெள்ளைப் பாஷாணம் அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க் கேளும்
வாறப்பா வண்டலுப்பு வெடியுப்புப் போடு வளமான சீனியுப்பு மூன்றுஞ் சேர்த்து
நேறப்பா தாம்பிரக் கிண்ணிரண்டு வாங்கி நேராக யிவை மூன்றும் பொடியாய்ப் பண்ணே.

148. பண்ணவே தலைப் பிண்ட நெய்யும் வார்த்து பலமாகப் பிசைந்து நல்லக் கிண்ணத்தில் வைத்து
அண்ணவே மேலுமொரு கிண்ணி மூடி அப்பனே பாண்டத்திலவர் மண்ணிட்டு
வண்ணவே கிண்ணியைத் தான் தினம் மேலிட்டு வளமாக யதன் மேலே யுவர் மண்ணிட்டு
கண்ணவே பாண்டத்தில் சில்லுப் போட்டு கனமாகச் சீலை மண்சேமுஞ் செய்யே.

149. செய்யவே கனல் வீசுடத்திலேகி செயமாகக் குழி வெட்டிச் சாத்தி வைத்து
மெய்யவே யம்பது நாள் சென்றெடுத்துப் பாரு மெய்யான வெள்ளையது காத்து வீசு
வெய்யவே வெள்ளைப் பாஷாணமப்பா வெகு கோடி சித்தர்க்கு யதலியாச்சே
நெய்யவே கெந்தி பாஷாணஞ் சொன்னேன் நேரான கல்லுப்பு பிண்டமப்பே.

150. உப்பான கெந்தியுடன் விஷக் கல்ச் சுண்ணம் முக்கியமுள்ள ஐந்தண்டத் தயிலம் வார்த்து
அப்பான ~~[illegible]~~ காரக் கிண்ணியதனில் வைத்து அப்பனே மேல் மூடிச் சீலை செய்து
கப்பான பாண்டத்தில் கழுதைச் சாணியிட்டு கனமான கிண்ணத்தை யதன் மேல் வைத்து
விப்பான அதன் மேலே சாணிப் போட்டு வளமாகச் சீலை மண்ணெழுஞ் செய்யே.

151. செய்யப்பா கழுதை நிற்குமிடத்திலப்பா செயமாகவுழி வெட்டிச் சமாதி வைத்து
வையப்பா இருபது நாள் சென்றெடுக்க வளமான கெந்தி பாஷாணமைய்யா
ஐய்யப்பா பாஷாண குகைகள் கோடி யப்பனே பூரஷாணம் பதனம் பண்ணும்
கைய்யப்பா வீரத்தின் வைப்புச் சொல்வேன் கனமான வீரமடா வைக்கக் கேளே.

152. கேளப்பா வண்ட வுப்பு வெடியுப்போடும் கெடியான சீனியுப்பு வெள்ளை கூட்டி
ஆளப்பா பொரிகாரம் வெங்காரந்தான் அப்பனே துருசுடனே விஷக் கல்ச் சுண்ணம்
நள்ளப்பா யித்தனை வகைதனையும் நலமாகப் பல மூன்று நிறுத்து வாங்கு
வாளப்பா ரசமது பலந்தான் ரண்டு வளமாகக் கல்லத்திற் சேர்த்தி வாட்டே.

153. ஆட்டடா ரசம் இரண்டும் ஒன்றாய்ப் போகும் அப்பனே பழுத்தால் பிசறிக் கொண்டு
வாட்டடா கிண்ணி குப்பி தன்னில் வைத்து வளமான சீலை மண் செய்து கொண்டு
நாட்டடா பாண்டமதிலுப்பை யிட்டு நலமான குப்பியைத் தான் நடுவே வைத்து
சாட்டடா மேலுமந்த உப்பைக் கொட்டி சமுர்த்தான சீலை மண்ணெழுஞ் செய்யே.

கெவுரி வைப்பு.

154. பண்ணப்பா கெவுரியுட வைப்புக் கேளு பண்பாகச் சொல்லுகிறேன் சுவனியேயய்யா
அன்னப்பா நாதமுடன் விந்து கூட்டி யப்பனே யிந்துப்பு படிகாரங் கூட்டே
வன்னப்பா அண்டத்தின் மெழுகு கூட்டி வளமான பாண்டத்தில் போட்டுக் கொண்டு
மன்னப்பா சீலை செய்து அடுப்பிலேற்றி மகத்தான தீயதனை மூட்டு மூட்டே.

155. மூட்டவே சூரியன் போலேய்யா முக்கியமுள்ள கட்டியது பூக்கும் பாரு
ஆட்டவே நால்ச் சாமம் யெரித்தாயானால் யப்பனே கெவுரி பாஷாணமாகும்
நாட்டவே தேவிக்குப் பூசை பண்ணு நலமான கெவுரியதை யார் தான் காண்பார்
மாட்டவே யின்னூல் போலின்னூலை மகத்தான கலைக்கியான மகிமை தானே.

156. சாதிலிங்க வைப்பு.

நாறுன சாதிலிங்க வைப்புச் சொல்வேன் நன்றான கறியுப்புக் கல்லுப்போடு
வேறான கெந்தியுடன் சூதங் கூட்டி வெளியான சீனமுடன் வகை பலந்தான் இரண்டு
அன்றுவே யிவை யெல்லாம் பொடித்துக் கொண்டு அப்பனே சுத்த சலம் தனில் மத்தித்து
வாறுன குப்பி தனில் பதனம் பண்ணும் வளமான சீலை மண் எழுஞ் செய்யே.

157. செய்யவே பாண்டத்திலுவர் மண்ணிட்டு செம்மையுடன் குப்பிதனை நடுவே வைத்து
வைக்கவே மேலுமந்த மண்ணையிட்டு வளமான மண் சீலையேழுஞ் செய்து
கைய்யவே யடுப்பேத்தி தீயை மூட்டி கனமான சாமமது பன்னிரெண்டு
மைய்யவே சாமது யெரித்துக் கொண்டு மதிதனிலே யிறக்கி வைத்து ஆறவைய்யே.

158. ஆறப்பா வுடைத்துப் பார் லிங்கந்தானும் அப்பனே கம்பி கம்பியாக
வாறப்பாலிங்கத்தால் வேதை கோடி வன்மாக லிங்கமதை யார் தான் செய்வார்
நாறப்பா நல்லிக்கே யெய்து யின்னூல் நலமான நூலதனை யார் தானீய்வார்
மாறப்பா வின்னூலைத் தேடி வாங்கு மகத்தான நூலிருந்தாலிடத்தைக் கே.

159. யெகியே யவரிடத்தில் தொண்டு பண்ணும் யென்மகனே நூல் கொடுக்காவிட்டா நூலை வாங்கி
வாங்கிய வித்ததிகங் கொடுக்காவிட்டால் பாங்கியே யவ்ன யிட்டுப் பணிவிடைகள்

(153)

**கெவுரி வைப்பு :-**

செய்யவே யடுப்பேத்தி தீயை மூடி செம்மையுடன் பனிரெண்டு சாமமைய்யா
வைய்யவே யெரித்துடைத்த ---- வளமான குப்பியை நீ யுடைத்தாயானால்
நெய்யவே சந்திரன் போல் பிரகாசிக்கும் நலமான சவ்வீர வைப்பு மாச்சு
பய்யவே மயேஸ்வரனைத் தொழுது போத்தி மகத்தான வைப்பதனைப் பதனம் பண்ணே.

160. கொள்ளவே கை பதருத் திருட வேண்டாம் குணமாக யவரிய வாங்கிக் கொள்ளு
மள்ளவே பணத்துக்கு சாஉஞ்சிற மீந்த மருத்தான ஞால்கு ஊத் தான் வாங்க வேண்டாம்
மெள்ளவே யவர் மனம் கனிந்து யீந்தால் மோசமடா வுந்தனக்கு முக்கியமாமே.

161. ஆமப்பா சாஸ்திரத்தை வெளிவிடாதே யப்பனே வெளி தனிலே விட்டே யானால்
வாமப்பா வல் விகைகள் நோய்களெய்தும் வளமாகச் சபித்திட்டார் நாசமாவாய்
காடிப்பா கல்வியது மயங்கிப் போகும் கண் மயக்கங் கொண்ட லைவாய் பேயைப் போலே
நாமப்பா வங்க பற்பம் சொல்லக் கேளும் நலமாகக் கொண்டு வந்து சொல்லக் கேளே.

## வங்க பற்பம்.

162. கேளப்பா சுத்த சலந் தன்னிலேய்யா கெடியாக பத்து தரம் உருக்கிச் சாயப்பா
வாளப்பா சாய்த்துடன் யத்ததெல்லாம் வளமாக பிழுசியது வட்டுப் போலாம்
ஆளப்பா புளியுடனே முப்பூவுங் கூட்டி அப்பனே சேர்த்தரைத்துக் கலசஞ் செய்து
நாளப்பா சீலை செய்துறவியுலர்த்தி நல்மான புடந் தனிலே போட்டிடாயே.

163. போட்டா புடம் போட்டு யெடுத்துப் பாரு பொருமியே வெள்ளியதாய்ப் பற்பமாகும்
வாட்டடா பற்பமதைப் பதனம் பண்ணும் வளமாக ரச பற்பஞ் சொல்லக் கேளும்
ஆட்டடா வங்க சுண்ணங் குகைதான் பண்ணி யப்பனே குகைக்குத்த சில்லுச் செய்து
நாட்டடா ரசந் தன்னைக் கல்வத்திட்டு நலமான சுத்தியது பதி மூன்று செய்யே.

## ரச பற்பம்.

164. செய்யப்பா ரசந் தன்னைக் குகையிலிட்டு செயமான சில்லுக்கு மெழுகால் தழுவப் போட்டு
வையடா குகைதன் மேல் சீலை யெடு வளமாகச் செய் நன்றாய் ரவி யுலர்த்தி
மய்யடா கோளி புடம் தன்னிப் போட்டு மருத்தான ரச பற்பம் வெள்ளையாகும்.
நையடா சூத பற்பம் பூசை பண்ணும் நலமான குருபரனைத் தொழுது போற்றே.

## லிங்க பற்பம்.

165. வாழ்த்திடவே லிங்க பற்பஞ் சொல்லக் கேளும் வளமான லிங்கத்தின் கட்டி வாங்கி
ஆள்ந்தடா வண்டத்தின் தைலந் தோய்த்து அப்பனே வண்டத்தின் மெழுகாற் கவசஞ் செய்து
மாத்தடா மண் சீலை யேழுஞ் செய்து மகத்தான நிழல் தனிலே யுலர்த்திக் கொண்டு
போத்டா புடம் போட்டு யெடுத்துப் பாரு பொருமியே பற்பமதாய்ப் புகழொன்றுதே.

166. ஒன்றுத பற்பமதை யென்ன சொல்வேன் யுத்தமனே பற்பத்தின் மருத்துவஞ் சோடி
வஞ்ஞன தாம்பிரத்தின் பற்பங் கேளு வளமான தாம்பிரத்தே சுத்தி பண்ணி
அன்றுத விஉச் சுண்ணம் அண்டச் சுண்ண அப்பனே யுப்புச் சுண்ண மூன்றுங் கூட்டி
மன்றுக வாய் நீராற் குழைத்துப் பூசி மருந்தான ஐந்தண்டத் தயிலத்தால் சீலை செய்யே.

167. செய்யாத சீலை மண்ணேழுஞ் செய்து செம்மையுடன் ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
மெய்யாத வெண்மையதாய் நீர்த்து நீர்க்கும் மகத்தான தாம்பிரத்தின் பற்பமய்யா
வய்யாத தாம்பிர பற்பம் பதனம் பண்ணு வளமான பற்பமதை யென்ன சொல்வேன்
ஐயதாவிதிற் சொன்ன பற்பமெல்லாம் யப்பனே வேதையதாய்க் கட்டுக் கொள்ளே.

## கேசரிமை.

168. கொள்ளடா வைத்தியரே யுங்களுக்கு கொடிதான பற்பத்தை யெடுத்து
வள்ளடா மை யொன்று சொல்லக் கேளும் வளமான மைய்யப்பா மருந்தான சித்து
அள்ளடா கேசிரியின் கொழுப்பு வாங்கி அப்பனே நெய்யதனை வாங்கிக் கொண்டு
நள்ளடா கன்னியுட சீலை வாங்கி நலமான நெய்தனிலே யூற வைய்யே.

169. வையடா வாதிந்த வார நாளில் வளமாகச் செத்தவன் தன் நெய்யை வாங்கி
நெய்யடா கபாலத்தி லூற்றிக் கொண்டு நலமாகச் சீலையைத் தான் திரியாய்ப் போட்டு
மெய்யடா தலைப் பிண்ட மண்டமய்யா மைந்தனே கவிழ்த்தி நன்றாய் விளக்கை யேத்தி
ஐயடா யெரித்துவா மை தான் பத்தும் அப்பனே பத்தின் பின் வழித்துக் கொள்ளே.

170. கொள்ளடா விரேகத்தின் தயிலம் விட்டு கொடிதான புறமிட்டு மத்தித்துக் கொள்ளு
வள்ளடா பறணி தன்னில் வைத்துக் கொண்டு வளமாகப் பூசித்துப் பதனம் பண்ணு
நள்ளடா மையெடுத்துச் சடமெல்லாந் தடவி நலமான அக்கினியைப் பூமி தனில் பரப்பி
மள்ளடா நமசிவயு வென்று சொல்லி மகத்தான அக்கினியில் படுத்துக் கொள்ளே.

171. கேளடா யுந்தனுக்கு குளிர்ச்சியாகும் கெடிதானதிலேக மெல்லாந் தண்ணீர் போலாம்
ஆளடா யுனைக் கண்ட பேர்களெல்லாம் அப்பனே மாமுனியோ சித்தனென்பார்
வள்ளடா வாய் மூடிச் செபத்தைப் பண்ணு வளமான அக்கினி ஸ்தம்பனமே யென்பார்
நாளடா மையைத் தான் கையில் தடவிக் கொண்டு நலமான சலத்தை யள்ளி நெருப்பில் வாரே.

172. வார்க்கையிலே நெருப்பது தான வியாதய்யா வளமான அக்கினி தான் வீசி யோங்கும்
ஆக்கையிலே யிப்புதுமை யதிசயந் தானென்பார் யதிசயந்தான் குறியாமல் ஸ்தம்பனவித்தே.
மார்க்கையிலே அக்கினியாம் சித்துச் சொன்னேன் மகத்தான சலஸ்தம் பசித்துக் கேளு
நார்க்கையிலே தலைப் பிண்டம் யீரல் வாங்கி நலமாகக் கருக்கியதை மையாய் செய்யே.

173. செய்யவே முப்பூவுங் கொஞ்சம் போட்டு செயமான சித்த வகைத் தயிலத்தால் மத்தி
வைய்யவே பறணி தனில் வைத்துப் பூசி வளமான வயிறவர்க்குப் பூசை பண்ணு
கைய்யவே பூசை பண்ணி மை யெடுத்து கனமான புலித் தோலில் நால் பக்கந் தடவி
நைய்யவே சமுத்திரத்தில் போட்டேயானால் நலமாகத் தோணிசிறதோர் தோணியிலேறே.

174. யேறிய சடகங் கன்னில் வைத்துக் கொள்ளு யென் மகனே யொரு பக்க முன்மையைப் பூசு
வாறியே யடுப்பு வைத்துக் கறிகளைக் கொட்டி வளமாக முன் கொளுப்பும் நெய்யும் வாரு
நாசியே அக்கி நான் பறந்து போச்சு நலமான அதிசயம் போல் பார்ப்பரய்யா
ஆறியே சோறுக்கு கறிகளாக்கு அப்பனே மனிதருக்கு அன்னம் போடே.

இதற்கு மேல் வேண்டாதன விடப்பட்டது.

<u>வங்க செந்தூரம்.</u>

வங்கம் விராகனிடை 3, கலியாண முருங்கைப் பூ 3 படி, பத்து, பத்து பூவாரப் போட்டு மூன்று சாமம் வறுக்கச் செந்தூரமாம். இதுக்கு அநுபானம் செந்தூரம் பணவிடை. அமிர்த சர்க்கரை பணவிடை துவாரை பஞ்சாங்கம் விரகடியும், சீனி சர்க்கரை விரகடியும் தேனில் ஒரு மண்டலங் கொள்ளத் தீரும்.

தீரும் வியாதி:- பதினெட்டுக் கல்லடைப்பு, பதினெட்டுக் கிரிச்சனம், பதினெட்டுப் பிரமியம்; இந்த மேகம் இது வெல்லாந் தீரும். இரும்புச் சட்டியில் வறுக்கவும். செங்குருவிச் கோல் கத்தை கட்டிக் கொண்டு வறுக்கவும். ஐல்

<u>புல்லுவிக்கு மருந்து.</u>

## பல் வலிக்கு மருந்து.

அதிமதுரம், கோஷ்டம், கொத்தமல்லி, இஞ்சி, புறங்கிப் பட்டை, வேலாம் பட்டை நரிவேர், வில்வ வேர், சித்தாமுட்டி வேர், அழுக்கிலாங் கிழங்கு இடித்து சட்டியில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு கால்படியாகக் காய்ச்சி கொப்பளிச்சு சாப்பிடவும் பல்வலி, தந்தச் சூலை போகும்.

---

11

---

## அகத்தியர் வைத்தியத்தில் ஆயிரத்திரட்டில் முன் காண்டம்.

### இந்த உ நாடி விதம்.

1. சீறான அகஸ்தியர் ஆயிரத் திரட்டில் செல்வமாயி முன் காண்டம் அஞ்சா மு சொல்வேன்
வீறான மாத்திரைகள் முதலிக் காணும் மேலான புலத்தியனே நடுவே கேளு
கூறான லேகியமுஞ் சூரணமு நெய்யும் கொள்ளையாய்க் கண்டிருக்கும் கூர்மையாக
ஆறான தயிலமுடன் யெண்ணை தாறும் அனேகமாய்க் கடசியிலே அருண்டவாறே.

2. அருண்டத்தில் கறிகேளும் நெறியும் கேளும் ஆகாத ~~சடலத்தில் உலக்கள்~~ சொல்வேன்
முருண்டத்தில் தசை கேளும் முன்னாத் தெண்பதாகும் மூட்டிய நரம்பு காணும் முப்பது மேலெட்டுமாகும்
சருண்டத்தி லெலும்பு தாறும் தப்பாத ராத்தெட்டு மாகும் தயவுடனே ரோமம் தாறும் தரிபாதி ரூமாகும்
நிகண்டத்தில் தோல்கள் கேளும் நிசமாக முப்பத் தெட்டாம் நீட்டிய குறிகளாம் நிசமாக கண்டவாறே.

3. ஆறுமே தசைகள் தாறும் அறுபத்தி அத்திரமும் ஆட்டிய அங்குலங்கள் அறுபது மேல் முப்பத்நாறும்
வாருமே பிறிதியில் நிற்கும் வலத் சல மேலாங் கேளும் வயத்தொரு யிருபதாகும் ஒலமது பகிருஞ்சாகும்
தேருமே யிப்பால் நிற்கும் சேர்ந்தது சஞ்சோரி கேளீர் தெளிவுடன் முப்பந்தஞ்சாம் தீர்ந்தது வாறு கண்டா
தாறுமே தேய்வின் கூறு சடத்திலே கலந்த தெட்டும் நாக்கிய வாய்வின் கூறு தப்பாத முப்பதாமே.

4. முப்பதாம் திங்கள் தாறும் முட்டிய பலமென்னுகும் முன்னதாம் மூக்குத் தாறும் மூக்கஞ்சாக நிற்கும்
தப்பதாம் நாக்குத் தாறும் பலமது மேதமாகும் தயவுடன் பல்கள் தாறும் பலமது மேது மாகும்
தப்பாத பல மொன்றரையாம் மெய்பதாங் கண்கள் இரண்டும் தானிரு களஞ்சுமாகும் மெய்யிது குறிகள் மூன்றும் விரு பல மூன்றுமாகும்
கப்பதாம் காயம் நின் கண குறியிதகளாகும் காயமே ஒடி நின்றுய் கடியத் நாடி கேளே.

55. நாடிதான் ~~எழுத்தாயிரம்~~ நாற்பது மென்று சொல்வார் நயனமாயதிலே கொண்ட நல் நரம்பத்தேயாகும்
ஆடிய நாடி பத்து அதவுடன் வளர்ந்த வாய்வு அறிவுடன் கூடி ஒன்று அமர்ந்திடும் வாறு கண்டா
மூடிய பத்தனுலே முளைத்த ரோகங் கேளீர் மன்று அபான-வாய்வால் முன்னிய மூலமெல்லாம்
காடிய தேவதத்தன் கறகிற சரங்களாகும் கனக மாந்தனஞ் செயன் கட்டிய ரோகம் போலே.

6. உத்த தோர் வருத் தானே உதித்தது மகா ரோகம் உருவிய சமானத் தாலே ஓடிய ரோக மெல்லாம்
பத்ததோர் கிரிகி பாடி பிறந்தது தசைகள் ரோகம் பண்ணிய அபானத்தாலே புத்தியம் நாலாயிரத்தில் நாற்பத்தெட்டாம்
பெத்த தோருசீகம் சொல்லும் பிறந்தது வெக்களமை பெரிய மாமுனிகள் சொல்லும் பிறப்பது வறி வந்தது தாறும்
க்கத தோர் வேதத்தில் கட்டியேருட்டி வைத்தோம் கலந்தது பத்திலே காட்டிய நாடி தானே.

7. காட்டி ~~நாடி~~ பத்திலே காலியும் காணலாகும் கலங்கிய பத்துக்குள்ளே கட்டிய நாடி

101